தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary

# கரிசல் இலக்கியமும் சோ.தர்மனும்

*Karisal Literature and So. Dharman*

**k.shyni***

*Annai Velankanni College,Tholayavattam – 629 157. Manonmaniam Sundaranar University,Tirunelveli, Tamil Nadu – 627 012., IN*

*தொடர்புக்கு: k.shyni — Shyni.sherin1995@gmail.com

**ORCID:** k.shyni https://orcid.org/0009-0007-8826-704X

| பெறப்பட்டது<br>25 September 2026 | திருத்தப்பட்டது<br>26 September 2026 | ஏற்கப்பட்டது<br>1 October 2026 | வெளியிடப்பட்டது<br>2 October 2026 |
|---|---|---|---|
| கட்டுரை எண்<br>MS26-2EMUSJ | **DOI**<br>https://doi.org/10.63300/tm12052026.07 | தொகுதி / இதழ்<br>தொகுதி 12, இதழ் 05<br>(October 2026) | P85-90 |

**சுருக்கம்**

தமிழ் நாவல் இலக்கியத்தில் மண்சார் படைப்புகள் குறிப்பிட்ட நிலப்பரப்பு, அந்நிலத்தில் வாழும் மக்களின் வாழ்வியல், மொழி, பண்பாடு, தொழில் மற்றும் சமூக உறவுகளைப் பதிவு செய்யும் தனித்துவமான இலக்கிய மரபாக வளர்ந்துள்ளன. அவ்வகையில் தென்தமிழகத்தின் வறண்ட கரிசல் நிலப்பரப்பையும் அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் நெருக்கடிகளையும் மையப்படுத்தி உருவான கரிசல் இலக்கிய மரபில் சோ. தர்மனின் படைப்புகள் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றன. இக்கட்டுரை கரிசல் எழுத்து மரபின் தொடர்ச்சியில் சோ. தர்மனின் படைப்புலகை ஆராய்கிறது. குறிப்பாக, அவரது கூகை, தூர்வை உள்ளிட்ட நாவல்களில் வெளிப்படும் வேளாண்மை வீழ்ச்சி, மழையின்மை, வறுமை, பசியின் கொடுமை, சாதிய முரண்பாடுகள், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் சிக்கல்கள் ஆராயப்படுகின்றன. கரிசல் நிலத்தின் இயற்கைச் சூழல் மாற்றங்கள் கிராமிய சமூக அமைப்பிலும் மனித உறவுகளிலும் ஏற்படுத்திய தாக்கங்களையும் சோ. தர்மன் தனது படைப்புகளில் இயல்பான காட்சியமைப்பு, வட்டார மொழிநடை மற்றும் பாத்திரப் படைப்புகளின் வழியாகப் பதிவு செய்கிறார். குறிப்பாக, சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் மக்களை நாவலின் மையத்திற்குக் கொண்டு வந்து அவர்களின் வாழ்வியல் அவலங்களையும் சமூக முரண்பாடுகளையும் வெளிப்படுத்துகிறார். இதன்மூலம் கரிசல் இலக்கிய மரபைத்

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

தொடர்ந்தும், அதனை நவீன சமூகப் பார்வையுடன் அணுகும் தனித்துவமான படைப்புக் குரலை சோ. தர்மன் உருவாக்கியுள்ளார் என்பது இவ்வாய்வின் வழி புலப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** திறவுச்சொற்கள்:- கரிசல் இலக்கியம்; சோ. தர்மன்; மண்சார் இலக்கியம்; வட்டார நாவல்; வேளாண்மை வீழ்ச்சி; கரிசல் வாழ்வியல்; விளிம்புநிலை மக்கள்; சாதிய முரண்பாடு; வறுமை; சமூகப் பதிவுகள்.

## முன்னுரை:-

தமிழ் நாவல் இலக்கியப் போக்கில் மண்சார் படைப்புகள் தனித்துவமான பரிமாணத்தை உருவாக்கியுள்ளன. குறிப்பிட்ட புவியியல் தளத்தைதையும் அதில் வாழும் உழைக்கும் மக்களின் வாழ்க்கையையும் மொழி வழக்குகளையும் தன் படைப்பாக்கத்தின் மையமாகக் கொள்ளும் இம்மரபு, தமிழக கிராமப்புற வாழ்வியலின் பல்வேறு கட்டங்களை நாவல்கள் பதிவு செய்துள்ளன. இம்மரபின் தொடர்ச்சியாக கரிசல் மண் இலக்கியம் என்று விரிந்து விரிவாக உருவாகியுள்ளது. கரிசல் எழுத்து மரபின் தொடர்ச்சியாக சோ.தர்மன் படைப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன.தர்மனின் எழுத்துக்களின் தூண்டுதல் கரிசல் நில வேளாண்மை தொழிலை அடிப்படையாகக் கொண்டது கரிசல் பகுதி. அப்பகுதியில் பருத்தி முதலிய கரிசல் பயிர்கள் இழப்பு தருவனவாக ஆயின சோ. தர்மனின் பெரும்பாலான நாவல்கள் உருளைக்குடி என்னும் அவருடைய சொந்த ஊரை களமாகக் கொண்டவை. கடந்த 50 ஆண்டுகளில் வேளாண்மையில் உருவான சரிவும் அதன் விளைவாக கிராமச் சமூக அமைப்பில் உருவான சிதைவும் அதன் வழியாக மானுட உறவுகளில் உருவாகும் சிக்கல்களுமே அவருடைய நாவலில் பேசுப்பொருள் இந்த மக்களின் வாழ்க்கையை சோ. தர்மன் நாவல்களில் பதிவு செய்துள்ள விதத்தினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது..

## தமிழில் மண்சார் படைப்புகளில் நாவல்கள் பெருமிடம்:-

தமிழில் நாவல் இலக்கியம் தோற்றம் பெற்ற காலப்பகுதியில் நகர்ப்புற நடுத்தர மக்களின் வாழ்க்கையைக் காட்சிப்படுத்தும் விதமாக அமைந்தது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பழைய அறிவியல் நிலையான அரசியல் பார்வைகள் இலக்கியப் படைப்பிலும் மையம் கொண்டு ஆய்வு நடைபெற படிப்படியாக கிராமப்புற மக்கள் மண்சார் வாழ்வியலைப் பதிவு செய்யும் அளவில் வளர்ச்சிப் பெற்றது இந்த மாற்றம் தமிழ் சமூகத்தில் நிலவிய நிலவுடைமை அமைப்பு, விவசாய வாழ்க்கை, சாதிய அமைப்பு ஆகியவற்றின் இயக்கியல் பிறழ்வுகளை அமைத்து நாவல் இலக்கியத்தை வெளிப்படுத்தும் கண்ணாடியாகவும் விளங்குகிறது.***"நாவல் தான் சமுதாயத்திற்கும், தனிமனிதனுக்கும் இடையேயுள்ள நெருங்கிய அடிப்படையான உறவுகளை ஆராய்ந்து பாத்திரங்களின் வர்க்க நிலையைக் கண்டறிந்து உயர்ந்தபடியான வாழ்க்கை நகர்ந்த மனிதனைக் காட்டும், நாட்டுப்புறவியல், அதிகாசம், புராணம் ஆகியவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்ட புதிய இலக்கிய வடிவமாகும்"1(ப.எண் 247)*** என்று கைலாசபதி

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

கூறுகிறார். மண்சார் நாவல்களின் ஆழமான இயல்பு என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பையும் அதில் வாழும் மக்களையும் அவர்களின் மொழி, நம்பிக்கை, பண்பாடு, உழைப்பு முறைகள், சாதிய உறவுகள் போன்றவற்றை கதைக்களத்தின் வழியாகப் பதிவு செய்வதாகும்.மனிதர்கள் தம்மிடையேத் தொடர்பு கொண்டு வாழ முடிந்தமையால் தான் சமுதாயம் தோன்றியது.***"மனிதனின் உணர்ச்சிகளினாலும், சிந்தனைகளாலும் பிறப்பது இலக்கியமாகும். இவ்விலக்கியத்தை மனித சமுதாய வாழ்வினின்னு வேறுபடுத்தி நோக்குதல் இயலாது"2 (ப.எண் 84)*** என்று கார்த்திகேசு சிவதம்பி கூறுகிறார்.

## கரிசல் எழுத்து மரபும் தொடர்ச்சியும்:-

கரிசல் மண் என்பது தென்தமிழ் நாட்டின் விருதுநகர் , தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சார்ந்த, கருப்பு நிற வறண்ட மண் பரப்பைக் குறிப்பதாகும். இப்பகுதிகள் மழையை நம்பி வேளாண்மை செய்யும் வானம் பார்த்த பூமியாக அமைந்துள்ளன. இத்தகைய நிலப்பரப்பையும் மக்களின் வாழ்க்கையயம் இலக்கியப் பதிவாகும் மரபே கரிசல் எழுத்து மரபு எனப்படுகிறது.

கி.ராவைத் தொடந்து, பூமணி , வண்ணதாசன் சோ. தர்மன் உள்ளிட்ட படைப்பாளிகள் கரிசல் மரபை வேவ்வேறு கோணங்களில் தம் படைப்புகளில் பதிவு செய்தனர். கி.ரா. நகைச்சுவையும் நாட்டுப்புற வழக்குகளையம் கலந்த நடையில் எழுதினார். பூமணியும் சோ. தர்மனும் கரிசல் மண்ணில் வலி மிகுந்த சகூகக் கட்டமைப்பின் எதார்த்தங்களை முன்னுறுத்தி எழுதினர். உயர் சாதி மக்களின் வெறுப்பும் இறந்துவிட்டால் அவர்களிடம் வேலை செய்யும் மக்களே துட்டிச் சொல்ல போக வேண்டும். குழி வெட்ட போக வேண்டும் இத்தகையச் செயலை கூகை நாவலில் காணலாம். ***"சீனி உங்க மனசுல என்ன நெனச்சிருக்க மாட்டுச் சந்தைக்கு போனன பாண்டி மாமா செத்துப் போயிட்டாரு பொணம் வந்துகிட்டு இருக்கு பள்ளக்குடியிலப் போய்ப் பார்த்தா ஒரு பயலையும் காணோம் என்று கத்தினார்"3(கூகை ப.22)*** இவ்வாறு அங்கு நடைபெற்ற சாதியக் கொடுமை பற்றி விவரித்துள்ளார்.

## கரிசல் எழுத்து மரபில் சே.தர்மன்:-

கரிசல் எழுத்து மரபில் சோ.தர்மனின் இடம் தனித்துவமானது. கி.ராஜநாராயணனின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டு எழுத்துலகிற்குள் பிரவேசித்த சோ.தர்மன் 'சூல்' நாவலுக்காக சாகித்திய அகாதமி விருது எழுத்தாளர். கி.ராவின் எழுத்து நாட்டுப்புறக் கதைச் சொல்லும் பண்பையும், நகைச்சுவைத் தன்மையையம் பெற்றுள்ள சோ. தர்மனின் எழுத்து கடந்த மும்பதாண்டுகளில் வேளாண்மையில் ஏற்பட்ட சரிவையும் கிராமப்புறச் சமூக அமைப்பில் உருவான சீர்சேடுகளையம் சமூக உறவும் சிக்கல்களையும் மையமாகக் கொண்டு அமைகிறது. சோ.தர்மன் ஒரு மில் ஆலை தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கியவர்.மில் தொழிலாளியாகப் பணிபுரிந்த காலத்திலும் தன்னை ஒரு விவசாயியாகவே உணர்ந்த சோ.தர்மனுக்கு, விவசாய வீழ்ச்சி ஏற்படுத்திய துயரமும் சீற்றமும் அவரது கதைகளின் மையச்சரடாக இடம் பெறுகின்றன. மழையின்மையை தூர்வை நாவலில் சோ.தர்மன் மழைக்கஞ்சி எடுக்கும் நிகழ்வாக பதிவு செய்துள்ளார்.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

*"மழயுமில்ல தண்ணியுமில்ல*

*மழக்கஞ்சியோ மழக்கஞ்சி*

*ஆடு மாடுக்கு தண்ணியில்ல*

*அம்மங் கஞ்சியோ அம்மங்கஞ்சி"4 (தூர்வை 156)*

ஊரில் உள்ள சிறுவர்கள் எல்லாம் சேர்ந்து மழக்கஞ்சி எடுத்தார்கள். மழக்கஞ்சி என்பது வீடு வீடாகச் சென்று அவர்கள் போடுகின்ற பல வகையான சோறுகளை சட்டிகளில் நிறைப்பது ஆகும். அந்த மழக்கஞ்சியினை குடித்துவிட்டு பெண்கள் ஒப்பாரி வைத்து அழுதனர் ஆனாலும் மழை பெய்யவில்லை. ***"முளைத்த விதைகள் நுனி கருகி காய்ந்தன கோரையும் பொடுதளையும் கூட காணவில்லை. கண்ணாய் பெருகாததால் கிணதறுகளில் தண்ணீர் கீழ் இறங்கியது.எல்லா சம்மாரிகளும் கண்ணைக் கட்டி காட்டுல் விட்டவர்களைப் போல் நடைபிணமானார்கள்"5(தூர்வை ப.157)*** சோ. தர்மனின் வரிகள் விவசாய மக்களின் வாழ்வியல் இடர்பாடுகளை பசிக்கொடுமையின் இயல்பான, அறச்சீற்றத்தையும் கரிசல் வாழ்வினைச் சித்தரிக்கின்றன..

### சமுதாயச் சூழமைவுகளும் பதிவுகளும் :-

சமுதாயத்தின் அடிப்படை அழகான மனிதன், தன் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்குக் கூடி வாழ்கிறான். அச்சமுதாய வாழ்வில் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தும் வாயிலாக மொழியை அமைத்துக் கொண்டான். மொழி வளர்ச்சியடைந்து மனித உள்ளத்தினின்று பெருக்கெடுத்தோடிய ஆற்றலால் உருவான இலக்கியத்தின் அடிப்படை உணர்வே சமுதாயம் தான். ***"ஒரு நில பகுதியில் நிலையாகக் கூடி வாழும் பெருந்திரளான மக்கள் என்ற பொலன் இருந்ததைக் குறிப்பிடுகிறது. அதாவது தம்மைப் பேணிக்காத்து கொள்வதற்கும் ஒன்றாக இணைந்துள்ள ஒரு பண்பாட்டு மானிடக்குழு சமூகம் எனப்படுகிறது. மனிதர்கள் தேவையின் காரமாகத்தான் தங்களுக்குள் ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு கூடி வாழ்கிறார்கள்."6(ப.எ 591)***என்று சமூகம் என்பதற்கு வாழ்வியல் களஞ்சியம் விளக்கம் தருகிறது.

### சோ.தர்மனின் நாவல்களும் விளிம்புநிலைப் பதிவுகளும்:-

விளிம்பு நிலையில் வாழும் மக்களது வாழ்வு பெறும் கவனம் புதிய நூற்றாண்டின் மற்றொரு பரிணாமமாக அமைகின்றது. இதற்கு முன்பும் விளிம்புநிலை மக்கள் வாழ்வு இலக்கியக் கவனிப்பைப் பெற்றுள்ளது. வாழ்வு என்பது படைப்பாளி எட்டவிருக்கும் வாழ்க்கைச் சிக்கலின் நிலைகளன் மட்டுமே. ஆனால் விளிம்புநிலை மக்கள் வாழ்வை அதன் பலம் மற்றும் பலவீனத்துடன் முழுமையாக அரவணைக்கும் நோக்கம் என்பது புதிய நூற்றாண்டைச் சார்ந்தது. உலக நாடுகளும் விளிம்புநிலை மக்களும் கவனம் பெறுவது விளிம்புநிலை பதிவுகளில் வாயிலாகவே அமைகின்றது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

மக்கள் சமுதாயம் என்னும் ஒருங்கமைப்பு ஒன்றுக்கொன்று நிலையான தொடர்புடைய குடும்பம், சமயம், பொருளாதாரம், அரசு, கல்வி உள்ளிட்ட பல்வேறு முக்கிய நிறவனங்கள் என்னும் உறுப்புக்களான நிறுவனங்களே தனிமனிதர்கயுடைய கடமைகள் , பண்பாட்டு ஒழுங்கங்கள், சமூக விதிகளை வகுத்து தத்தமது செயல்களை ஆற்றுகின்றன. சமூகத்தின் ஒவ்வொரு கட்டமைப்பிலும் திண்டத்தகாதவர்களாகவே விளிம்புநிலை மக்கள் இருக்கின்றனர். இதனை,

“மேகலத்தார் பிணம் எரித்தார்கள் தேர் கட்டினார்கள், தீச்சட்டித் தூக்கினார்கள், துட்டி சொல்லிப் போனார்கள். காலையில் தண்ணீர் எடுக்கப்போன பள்ளக்குடி, பறக்குடி பெண்கள் வெறும் பானையுடன் கால் கடுக்க நின்றார்கள். வாய் வலிக்கக் கத்தினார்கள்.சாமியோவ் ஒருவாளி ஊத்துங்க சாமி…ஆயிரம் இருந்தாலும் குடிதண்ணிக்குப் பஞ்சம் பண்ணாதிக சாமி… வெற்றுப் பானைகளுடன் வீடு திரும்பினார்கள்”7(கூகை, ப.எண் 80) என்பதன் மூலம் மேல் வர்க்கத்தினர் எளிய மக்களைத் துன்புறுத்தியமை வெளிப்படுகிறது. மேலும், “என்ன சாமி காலம் கடவுளு… ஆயிரம் பேருக்கு அன்னம் போட்ட கை, இன்னக்கி அடுத்தாளுக்கு வேல செஞ்சு அதுல வயத்தக் கழுவி… எனக்கு நெனைக்கவே நெஞ்சு அடைக்கு சாமி”.(தூர்வை ப.எண் 200) இத்தகைய மனிதர்களின் வாழ்விடச் சூழலைக் கதைக்களமாகக் கொண்டு நாவல்களைப் படைத்திருக்கும் சோ. தர்மன் விளிம்புநிலை கரிசல்காட்டு மனிதர்களை நாவல் மையத்திற்குக் கொண்டு வரச் செய்கிறார்.சோ.தர்மன் நாலவ்களில் சமுதாய அலகுகளும் கூட்டு வாழ்கைச் சூழல்களில் ஏற்படுத்தப்பெற்ற நியாயமற்ற அணுகுமுறைகளும் உரையாடலுக்கு உட்படுத்தபடுகின்றன. ***"எழுத்தாளன் குனிந்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப் பிராணி சமுதாயத்தின் எல்லாக் காலங்களிலும் முரண்பாடுகளும், போராட்டங்களும் இயக்கங்களும் இடைவிடாது நடை பெற்றுக் கொண்டிருக்கும். எனவே சமுதாயத்தில் காணப்படும் துன்பத் துயரங்களையும் எதிர் நோக்குபவரால் சமுதாயத்தில் நடக்கும் அல்ல நிலைகளைப் பிரதிபலிக்கும் வண்ணம் இலக்கியம் எழுகிறது"8(ப.எண் 26)*** என்று டாக்டர் கைலாசபதி குறிப்பிடும் கருத்து நோக்கத்தக்கது.

தொழில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் விளிம்புநிலை மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றனர். ஒவ்வொரு காலக்கட்டத்திலும் விளிம்பு நிலை மக்கள் உருவாவதற்கு இந்தச் சமூக கட்டமைப்பே காரணமாக அமையக் கூடியதாக இருக்கின்றது. முற்காலத்தில் தொழில் ரீதியாகவும் பின் தங்கிய விளிம்பு நிலை மக்களாகக் கருதப்பட்டுள்ளனர். அதனைப் போலவே பொருளாதார ரீதியாக இத்தகைய மக்களை இனங்கண்டுபெரும்பாலான சமுதாய மக்கள் விளிம்பு நிலை மக்களை எதிர்க்கக் கூடியவர்களாகவே இருக்கின்றனர்.சமூக முரண்களையும் அதன் பின்புலக்காரணிகளையும் காட்சியமைப்பிலும் பாத்திரப்படைப்புகளிலும் வெகு இயல்பாக நிகழ்த்திக் காட்டும் சோ.தர்மன் விளிம்புநிலை குறித்த உரையாடலுக்கு தம் பாத்திரங்களின் வழியாகவும் வசனங்களின் வழியாகவும் வறுமைத் தடத்தினை அமைத்துக் கொண்டுள்ளார். சாதி, வர்க்கம் என்ற அமைப்பிலிருந்தே வர்க்க ரீதியாகப் பொருளாதார ரீதியாகத் தாழ்வினால் துயருறும் இனத் தொழில் புரிவோரையும், சமூக ரீதியாகவும் விளிம்பு நிலை மக்கள் மூலம் தன்மையை விளக்கும் முகமாக சோ.தர்மன் நாவல்கள் அமைகின்றன.

https://doi.org/10.63300/tm12052026.07

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

## தமிழில் சோ.தர்மன் படைப்புகளின் தாக்கங்கள் :-

சோ.தர்மனின் படைப்புகள் தமிழ் இலக்கிய வெளியில் பல்வேறு தளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. தமிழ் இலக்கியச் சிந்தனையின் தளத்தில் இமையத்தின் 'கோவேறு கழுதைகள்' பாமாவின் 'கருக்கு' ஆகியவற்றுடன் இணைத்து சோ.தர்மனின் 'கூகை', 'தூர்வை', ஆகியவை ஒப்பியல் தமிழ் நாவல்களாகக் கருதப்படுகின்றன. இது கரிசல் மரபின் மண்சார் எழுத்தை தலித் அரசியல் பேசு பொருளுடன் இணைத்த ஒரு முக்கிய பங்களிப்பாகும். மொழி பெயர்ப்புகள் வழியாக சோ.தர்மனின் படைப்புகள் தமிழுக்கு வெளியேயும் அடையாளம் பெற்றன. 'கூகை' நாவல் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்திலும் 'மூங்கர்' என்னும் பெயரில் மலையாளத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது கரிசல் இலக்கியத்தை உள்ளூர் எல்லைகளைத் தாண்டி தேசிய, சர்வதேசத் தரத்திற்குக் கொண்டு சென்ற முக்கிய நிகழ்வாகும். சூல் நாவல்களுக்கான சாகித்திய அகாதமி விருது உள்ளிட்ட அங்கீகாரங்களின் மூலம் கரிசல் வட்டார இலக்கியத்தின் இலக்கியத் தகுதியை நிலைநிறுத்தி உறுதி செய்கிறது. இதன் விளைவாக, இளைய தலைமுறை படைப்பாளிகளிடையே மண்சார் எழுத்துக்கான ஆர்வமும், கரிசல் வட்டார மொழியை இலக்கிய மொழியில் பயன்படுத்துவதற்கானத் துணிவும் அதிகரித்துள்ளன.

## முடிவுரை :-

தமிழில் மண்சார் நாவல் மரபின் வரலாற்றுப் போக்கிலிருந்து வட்டார நாவல், கரிசல் எழுத்து மரபு, அவற்றின் தொடர்ச்சியில் சோ.தர்மனின் இடம் வரையறுக்கப்படுகிறது. கி.ராஜநாராயணனின் தாக்கத்திலும், பூமணியுடனான உறவிலும் வளர்ந்த சோ.தர்மன், கரிசல் மரபின் தொடர்ச்சியாக அமைந்தும் அதனை விமர்சித்தும், கரிசல் வாழ்வின் அவலங்களையும் அதில் உள்ள உறவுச் சிக்கல்களை மையமாகக் கொண்டு ஒரு நவீன விமர்சனக் குரலை உருவாக்கியுள்ளார் என்பது இக்கட்டுரை மூலம் தெளிவாகிறது.

## துணைநூற்பட்டியல்:

**1. காசிப்பிள்ளை (கார்த்திகேசு). நாவலும் வாழ்க்கையும். சென்னை: நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்.2013.**

**2. கைலாசபதி, க. தமிழ் நாவல் இலக்கியம். சென்னை: பாரி நிலையம் / நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்.2017.**

**3. தர்மன், சோ. (2017 )தூர்வை.**

**4. தர்மன், சோ. (2020) கூகை (இரண்டாம் பதிப்பு). திருச்சி: அடையாளம் பதிப்பகம்.**

**5. தமிழ்ப் பல்கலைக்கழகம். வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி 8). தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.**

© 2026 k.shyni. https://creativecommons.org/licenses/by/4.0 வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..